செ. கு. எண்: 153 நாள் : 21.08.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 21.8.2014

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.குமார் அவர்கள் 30.4.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் காவல் நிலைய குற்ற புலனாய்வு தனிப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.பாலசுப்பிரமணியன் அவர்கள் 3.5.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், குற்ற புலனாய்வுத் துறை தனிப் பிரிவில் சுருக்கெழுத்தராகப் பணி புரிந்து வந்த திரு. T.ஜெயபிரகாஷ் அவர்கள் 3.5.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர் ஆயுதப்படை 6-ம் பிரிவில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. D.ஜேம்ஸ்ராஜன் அவர்கள் தனக்கன்குளம் - திருநகர் சாலையில் 3.5.2014 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. M.சரவணக்குமார் அவர்கள் 4.5.2014 அன்று ராஜபாளையம் வட்டம், சோழபுரம் ரயில்வே தண்டவாளத்தைக் கடக்க முற்பட்ட போது ரயில் மோதியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரம் காவல் நிலையத்தில் ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.சங்கர்தேவ் 7.5.2014 அன்று கீழஈரால் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. D.நடராஜசிங் அவர்கள் 7.5.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.ராமலிங்கம் அவர்கள் 11.5.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், சென்னை அரசு பொது மருத்துவமனை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.ஞானமூர்த்தி அவர்கள் 12.5.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர், தல்லாகுளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திருமதி V.சாந்திராணி அவர்கள் 12.5.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை ஆய்வாளர் சங்கர்தேவ், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் குமார், பாலசுப்பிரமணியன், ராமலிங்கம், ஞானமூர்த்தி; தலைமைக் காவலர்கள் நடராஜசிங், சாந்திராணி; முதல்நிலைக் காவலர்கள் ஜேம்ஸ்ராஜன், சரவணக்குமார், சுருக்கெழுத்தர் ஜெயபிரகாஷ் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்கள் மற்றும் சுருக்கெழுத்தர் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**